

# தி.மு.க. இளைஞர் அணி

## முத்தமிழறிஞர் கலைஞரின் பிறந்த நாள் & திராவிட மாடல் அரசின் நான்காண்டு சாதனை விளக்க தெருமுனைக் கூட்டங்கள்!

### திருவள்ளூர் மத்திய மாவட்ட இளைஞர் அணி அமைப்பாளர் கே.சுரேஷ்குமார் அறிவிப்பு!

கழக இளைஞர் அணியின் மாவட்ட – மாநகர – மாநில அமைப்பாளர், துணை அமைப்பாளர்கள் ஆலோசனைக் கூட்டத்தில் நிறைவேற்றப்பட்ட தீர்மானத்தின்படியும் கழக இளைஞர் அணிச் செயலாளர் மாண்புமிகு துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் முரசொலியில் வெளியிட்ட அறிவிப்பின்படியும், முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் 102–வது பிறந்த நாளை முன்னிட்டு, தமிழர் நலன் காத்த அவரின் புகழ் பரப்பும் வகையிலும், கழகத் தலைவர் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் தலைமையிலான திராவிட மாடல் அரசின் நான்காண்டு சாதனைகளை விளக்கியும், கழகப் பேச்சாளர்கள் மற்றும் இளம் பேச்சாளர்களைக் கொண்டு திருவள்ளூர் மத்திய மாவட்டத்தில் உள்ள அனைத்து ஒன்றிய–நகர–பகுதி–பேரூர்களில் நடைபெறும் தெருமுனைக் கூட்டங்களின் விவரம் வருமாறு :–

| வ. எண் | நாள் | ஒன்றியம்/ நகரம் பகுதி / பேரூர் | இடம் | பேச்சாளர்கள் |
|---|---|---|---|---|
| 1 | 19.06.2025 | திருவேற்காடு நகரம் | காடுவெட்டி | 'யூடு புரூட்டஸ்' மைனர் பம்மல் வீ.தினேஷ் |
| 2 | 20.06.2025 | திருவள்ளூர் மேற்கு ஒன்றியம் | பெருமாள்பட்டு | பவானி கண்ணன் கா.ராஜராஜேஸ்வரி |
| 3 | 21.06.2025 | பூவிருந்தவல்லி மேற்கு ஒன்றியம் | பஜார் வீதி, வெள்ளவேடு | ஆடுதுறை உத்திராபதி உ.யாசர் அராபத் |
| 4 | | ஆவடி வடக்கு பகுதி | காந்தி நகர் | திருவெற்றியூர் கருணாநிதி சி.கவின்குமார் |
| 5 | 22.06.2025 | ஆவடி கிழக்கு பகுதி | திருமுல்லைவாயில் | வே.மதிமாறன் க.பார்கவி |
| 6 | | எல்லாபுரம் மத்திய ஒன்றியம் | மாகரல் | ஈரோடு இறைவன் அ.தா.டெக்சின் ரோமேரியோ |
| 7 | 23.06.2025 | ஆவடி மேற்கு பகுதி | காவல் நிலையம் அருகில், பட்டாபிராம். | இந்திரகுமார் தேரடி விக்னேஷ் உதயன் |
| 8 | 24.06.2025 | திருமழிசை பேரூர் | பஜார் வீதி, திருமழிசை. | மில்டன் சாய்ரித்திக் சக்திவேல் |
| 9 | | திருநின்றவூர் நகரம் | காந்தி சிலை அருகில் | தூத்துக்குடி சரத்பாலா அ.தா.டெக்சின் ரோமேரியோ |
| 10 | 25.06.2025 | பூவிருந்தவல்லி நகரம் | செட்டி தெரு, பூவிருந்தவல்லி. | சைதை சாதிக் ரிஷி சந்தோஷ் |
| 11 | | ஆவடி தெற்கு பகுதி | அன்னனூர், கோணாம்பேடு. | செங்குன்றம் திராவிடமணி பா.ஸ்ரீலேகா |
| 12 | 26.06.2025 | திருவள்ளூர் கிழக்கு ஒன்றியம் | பாக்கம் பஜார் | சேலம் சுஜாதா ம.மோகநிதி |
| 13 | | திருவள்ளூர் வடக்கு ஒன்றியம் | வெள்ளியூர் | கரூர் முரளி நா.அருண் |
| 14 | 27.06.2025 | பூவிருந்தவல்லி கிழக்கு ஒன்றியம் | பாரிவாக்கம் | ஸ்ரீராம் பம்மல் வீ.தினேஷ் |

திருவள்ளூர்

நாள் : 17-06-2025





பெரம்பலூர் மாவட்ட பொறியாளர் அணி சார்பில் கலைஞர் அவர்களின் பிறந்த நாள் விழாவை முன்னிட்டு, துறைமங்கலம் ரோவர் தனியார் முதியோர் காப்பகத்தில் உள்ளவர்களுக்கு, மாவட்ட கழக பொறுப்பாளர் வீ.ஜெகதீசன் தலைமையில், சட்டமன்ற உறுப்பினர் எம். பிரபாகரன் முன்னிலையில் புத்தாடைகள் வழங்கி, மதிய உணவு வழங்கப்பட்டது. இந்த நிகழ்ச்சியில் பொறியாளர் அணி மாவட்ட அமைப்பாளர் தி.இராசா,பொறியாளர் அணி மாவட்ட தலைவர் பி.எஸ்.வேல்முருகன், மாவட்ட துணைத்தலைவர் பி.செல்லச்சாமி, மாவட்ட துணை அமைப்பாளர்கள் கே.பெரியசாமி, ஜி.கே.மூர்த்தி, ஆர். ரவிச்சந்திரன், ஆர்.ராஜாராம், ஜி.ராஜசேகர் உள்ளிட்டோர் கலந்து கொண்டனர்.



சேலம் கிழக்கு மாவட்டம் அயோத்தியாப்பட்டணம் தெற்கு ஒன்றியம் குப்பனூர் ஊராட்சி வெள்ளியம்பட்டி முதல் சுக்கம்பட்டி ஊராட்சி பாலத்தூர் அரூர் மெயின் ரோடு வரை ரூ. 1 கோடி மதிப்பீட்டில் தமிழக முதல்வர் கிராம சாலை திட்டத்தின் கீழ் தார்ச் சாலை அமைக்கும் பணியினை அயோத்தியாப்பட்டணம் தெற்கு ஒன்றிய செயலாளர் ஏ.விஜயகுமார் தொடங்கி வைத்தார். இதில் ஒன்றிய நிர்வாகிகள், அப்பகுதி மக்கள் கலந்து கொண்டனர்.



பொள்ளாச்சி தெற்கு நகரக் கழகக் கூட்டம் நகர கழக செயலாளர் அமுதபாரதி வரவேற்புரையில் நடைபெற்றது. இக்கூட்டத்தில் மாவட்ட கழக செயலாளர் தளபதி முருகேசன் உரையாற்றினார். இதில் தலைமைச் செயற்குழு உறுப்பினர் மு.க.முத்து, பொதுக்குழு உறுப்பினர் ஜெயக்குமார், நகர்மன்ற தலைவர் டாக்டர் என்.சியாமளா, துணைத் தலைவர் எஸ்.கௌதமன், மாவட்ட மாணவர் அணி அமைப்பாளர் சூலூர் பிரபு, நகர்மன்ற உறுப்பினர்கள் அ.பாத்திமா, என்.நாச்சிமுத்து, கழக நிர்வாகிகள் ஏ.அழகப்பன், ச.தர்மராஜ், ஆ.கி.மூர்த்தி, இரும்புக்கடை சுப்பிரமணியம், வடிவேல் உள்பட பலர் கலந்து கொண்டனர்.

### திருப்பூர் மாவட்டம் – பல்லடம் வட்டம் – நாரணாபுரம் கிராமம்

# திருச்சி - கோயம்புத்தூர் தேசிய நெடுஞ்சாலையில் விபத்து!

## உயிரிழந்தவர்கள் குடும்பத்தினருக்கு முதல்வர் மு.க.ஸ்டாலின் நிதியுதவி அறிவிப்பு!

சென்னை, ஜூன் 19–

திருப்பூர் மாவட்டம், பல்லடம் வட்டம், நாரணாபுரம் கிராமம், திருச்சி– கோயம்புத்தூர் தேசிய நெடுஞ்சாலையில் நிகழ்ந்த சாலை விபத்தில் உயிரிழந்தவர்களின் குடும்பத்தினருக்கு ஆறுதல் மற்றும் நிதியுதவி முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் அறிவித்துள்ளார்.

முதல்வர் அவர்களின் அறிவிப்பு வருமாறு:

திருப்பூர் மாவட்டம், பல்லடம் வட்டம், நாரணாபுரம் கிராமம், திருச்சி – கோயம்புத்தூர் தேசிய நெடுஞ்சாலையில் பல்லடம் நகராட்சி அலுவலகத்திற்கு முன்பு நால்ரோடு சந்திப்பில் நேற்று முன்தினம் (17.6.2025) பிற்பகல் 2.50 மணியளவில் TN09 DT 4353 என்ற பதிவெண் கொண்ட கண்டெய்னர் லாரி ஒன்று வளைவில் திரும்பும்போது கட்டுப்பாட்டை இழந்து எதிர்பாராதவிதமாக கவிழ்ந்த விபத்தில், அருகில் இரு சக்கர வாகனத்தில் பயணம் செய்துகொண்டிருந்த பல்லடம் வட்டம், நாரணாபுரம் கிராமம், அறிவொளி நகரைச் சேர்ந்த திருமதி. மகாராணி (வயது 55) (க/பெ.நாகராஜ்) மற்றும் திருமதி.கிருத்திகா (வயது 35) க/பெ. (லேட்) செல்வராஜ் ஆகிய இரண்டு பெண்கள் கண்டெய்னரின் கீழ் சிக்கி சம்பவ இடத்திலேயே உயிரிழந்தனர் என்ற துயரகரமான செய்தியைக் கேட்டு மிகுந்த அதிர்ச்சியும் வேதனையும் அடைந்தேன்.

மேலும், இந்த விபத்தில் உயிரிழந்த இரண்டு பெண்களின் குடும்பத்தினருக்கும், அவரது உறவினர்களுக்கும் எனது ஆழ்ந்த இரங்கலையும் ஆறுதலையும் தெரிவித்துக் கொள்வதோடு, உயிரிழந்தவர்களின் குடும்பத்தினருக்கு தலா மூன்று இலட்சம் ரூபாய் முதலமைச்சரின் பொது நிவாரண நிதியிலிருந்து வழங்கிடவும் உத்தர விட்டுள்ளேன்.

இவ்வாறு முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் அறிவித்துள்ளார்.



# தி.மு.க. இளைஞர் அணி

## முத்தமிழறிஞர் கலைஞரின் பிறந்த நாள் & திராவிட மாடல் அரசின் நான்காண்டு சாதனை விளக்க தெருமுனைக் கூட்டங்கள்!

### வேலூர் மாவட்ட இளைஞர் அணி அமைப்பாளர் க.இராஜமார்த்தாண்டன் அறிவிப்பு!

கழக இளைஞர் அணியின் மாவட்ட – மாநகர – மாநில அமைப்பாளர், துணை அமைப்பாளர்கள் ஆலோசனைக் கூட்டத்தில் நிறைவேற்றப்பட்ட தீர்மானத்தின்படியும், கழக இளைஞர் அணிச் செயலாளர் மாண்புமிகு துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் முரசொலியில் வெளியிட்ட அறிவிப்பின்படியும், முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் 102–வது பிறந்த நாளை முன்னிட்டு, தமிழர் நலன் காத்த அவரின் புகழ் பரப்பும் வகையிலும், கழகத் தலைவர் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் தலைமையிலான திராவிட மாடல் அரசின் நான்காண்டு சாதனைகளை விளக்கியும், கழகப் பேச்சாளர்கள் மற்றும் இளம் பேச்சாளர்களைக் கொண்டு தெருமுனைக் கூட்டங்கள் நடைபெற்று வருகின்றன.

வேலூர் மாவட்டத்தில் உள்ள குடியாத்தம் மேற்கு, பேர்ணாம்பட்டு கிழக்கு, பேர்ணாம்பட்டு மேற்கு, பேர்ணாம்பட்டு தெற்கு, அணைக்கட்டு மேற்கு, அணைக்கட்டு கிழக்கு, அணைக்கட்டு மத்திய, காட்பாடி தெற்கு, கணியம்பாடி ஆகிய ஒன்றியங்களிலும், பள்ளிகொண்டா, ஒடுகத்தூர், பென்னாத்தூர் ஆகிய பேரூர்களிலும் தெருமுனைக் கூட்டங்கள் முடிவடைந்துள்ள நிலையில், மற்ற ஒன்றிய–நகர–பேரூர்களில் நடைபெறும் தெருமுனைக் கூட்டங்களின் விவரம் வருமாறு :–

| வ. எண் | நாள் | ஒன்றியம்/ நகரம் பகுதி / பேரூர் | இடம் | பேச்சாளர்கள் |
|---|---|---|---|---|
| 1 | 19.06.2025 | வேலூர் ஒன்றியம் | தெள்ளூர் | த.பாரி ம.ஜ.சந்தீப் |
| 2 | | குடியாத்தம் தெற்கு ஒன்றியம் | மேல்முட்டுகூர் | பழ.இராஜேந்திர பிரசாத் ச.பேரரசன் |
| 3 | | காட்பாடி கிழக்கு ஒன்றியம் | சேனூர் | கு.மொழிமாறன் லோ.ராதிகா |
| 4 | | காட்பாடி வடக்கு ஒன்றியம் | பொன்னை | பெரிய கோடீஸ்வரன் வெ.ஆர்த்தி |
| 5 | | வாலாஜா மேற்கு ஒன்றியம் | அக்ராவரம் | கழிஞ்சூர் கண்ணன் வழக்கறிஞர் யாசர் |
| 6 | | திருவலம் பேரூர் | பேருந்து நிலையம் அருகில் | சேர்க்காடு கென்னடி இரா.தமிழ்வாணன் |
| 7 | | பேர்ணாம்பட்டு நகரம் | பேர்ணாம்பட்டு | த.புவியரசி ஜா.முஹம்மத் ஜபீர் |
| 8 | 20.06.2025 | குடியாத்தம் நகரம் | புதுப்பேட்டை | கழிஞ்சூர் கண்ணன் அ.தமிழரசி |
| 9 | 21.06.2025 | காட்பாடி மேற்கு ஒன்றியம் | வண்றந்தாங்கல் | வி.ஏ.அன்பு செ.வெற்றிச்செல்வன் |
| 10 | 22.06.2025 | காட்பாடி தெற்கு பகுதி | புது பள்ளிக்குப்பம் | கழிஞ்சூர் கண்ணன் அ.தமிழரசி |

வேலூர்

நாள் : 17-06-2025

